
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

## சென்னை எல்லைச் சாலை திட்டம்

# *சுற்றுச்சூழல் மற்றும் சமூக சான்றாவனத்தின் நிர்வாக சுருக்கம்*



# சென்னை எல்லைச் சாலை திட்டம்
## சுற்றுச்சூழல் மற்றும் சமூக சான்றாவனத்தின் நிர்வாக சுருக்கம்
### (Executive summary of Environment and Social Due Diligence Report)

1. சென்னை இந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் பெருநகரம் ஆகும். கடந்த பத்தாண்டுகளில் இப்பெருநகரம் நகர்ப்புற ஒருங்கிணைப்பு காரணமாக குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. இப்பெருநகரத்தில் மக்கள் தொகை அதிகரிப்பால் குடிநீர், நிலத்தடி கழிவு நீர் கால்வாய்கள், மின்சாரம் மற்றும் சாலை போன்ற அடிப்படை வசதிகளுக்கான தேவைகளும் அதிகரித்து வருகின்றன. சென்னை பெருநகரை சுற்றி தேசிய நெடுஞ்சாலை (தே.நெ) எண் 16, தே.நெ. எண் 716, தே.நெ. எண் 48 மற்றும் தே.நெ. எண் 32 ஆகிய தேசிய நெடுஞ்சாலைகளும், உள் வட்டச் சாலை, சென்னை புறநகர் சாலை மற்றும் புறச் வட்டச் சாலை ஆகிய முக்கிய சாலைகள் அமைந்துள்ளன. இருப்பினும், வளர்ந்து வரும் மக்கள் தொகை பெருக்கத்தின் தேவையினை ஈடு செய்ய இச்சாலை வசதிகள் போதுமானதாக இல்லை. எனவே, தமிழ் நாடு அரசின் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சென்னை பெருநகரத்தின் தேவையினை பூர்த்தி செய்ய சென்னை வெளிவட்ட சுற்றுச்சாலை திட்டத்தினை மேம்படுத்த தேர்ந்தெடுத்துள்ளது. இந்த வெளிவட்ட சுற்றுச்சாலையானது 5 பகுதிகளை உள்ளடக்கியதாகும். அவையாவன

| திட்ட பகுதி | விவரம் | நீளம் (கி.மீ) | தற்போதைய நிலை | நிதி நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1 | வடக்கு துறைமுக அணுகு சாலை – தேசிய நெடுஞ்சாலை எண் 16ல் எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரை | 25.40 | விரிவான திட்ட அறிக்கை பகுப்பாய்வு நிலை (நெடுஞ்சாலை மற்றும் கட்டிட வரைபடங்கள்) | ஜப்பான் பண்ணாட்டு கூட்டுறவு முகமை (JICA) |
| 2 | தேசிய நெடுஞ்சாலை எண் 16ல் தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழிச்சாலை ஆரம்பம் வரை | 26.10 | விரிவான திட்ட அறிக்கையின் வரைவில் திருத்தங்கள் மேற்கொள்ளும் நிலை | ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) |
| 3 | திருவள்ளூர் புறவழிச்சாலை ஆரம்பம் முதல் தேசிய நெடுஞ்சாலை எண் 48ல் ஸ்ரீபெரும்புதூர் வரை | 30.10 | | |
| 4 | தேசிய நெடுஞ்சாலை எண் 48ல் ஸ்ரீபெரும்புதூர் முதல் தேசிய நெடுஞ்சாலை எண் 32ல் சிங்க பெருமாள் கோவில் வரை | 23.80 | இப்பகுதி செயல்பாட்டில் உள்ளது | தமிழ்நாடு அரசு |
| 5 | நெடுஞ்சாலை எண் 32ல் சிங்க பெருமாள் கோவில் முதல் மகாபலிபுரம் வரை | 27.47 | விரிவான திட்ட அறிக்கையின் வரைவு பின்னர் புத்தாக்கப்படும் (திட்ட நிறைவேற்றத்திற்கு முன்) | இன்னும் முடிவு செய்யப்படவில்லை |
| | மொத்தம் | 132.87 | | |

2. இவற்றில் பகுதி 1, ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு முகமையின் (JICA) நிதி உதவியுடனும், பகுதி 2 மற்றும் பகுதி 3 ஆகியவை ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) நிதி உதவியுடனும் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பகுதி 4 தமிழக அரசின் நிதியினை கொண்டு ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பகுதி 5 பின்னர் மேம்படுத்தப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. ***சென்னை வெளிவட்ட சுற்றுச் சாலை மற்றும் அதனுடன் இணைந்த வசதிகளின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக சான்றாவனம்:*** AIIBன் சுற்றுச்சூழல் மற்றும் சமூக கொள்கையின் படி சென்னை எல்லைச் சாலையின் பகுதி 1, 4 மற்றும் 5க்கு சான்றாவன ஆய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, AIIB நிதியுதவி அளிக்கும் திட்டப் பகுதிகள் 2 மற்றும் 3 உடன், திட்டப் பகுதிகள் 1, 4 மற்றும் 5 உடன் இணைந்த/தற்போது இருக்கின்ற வசதிகள்[1] சான்றாவன ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சான்றாவன ஆய்வு, பகுதி 1, 4 மற்றும் 5க்கு தேவையான பாதுகாப்பு தேவைகளான (i) ஒழுங்குமுறைகள்/அனுமதிகள்/ஒப்புதல்கள் (சுற்றுச்சூழல் தடையில்லா சான்று, வனத்துறை தடையில்லா சான்று போன்றவை), (ii) மாற்று வழிக்கான பகுப்பாய்வு, (iii) சுற்றுச்சூழல் மேலாண்மை நடவடிக்கைகளை உள்ளடக்கிய சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கங்களை கண்டறியும் செயல்முறை, (iv) பொதுமக்களுடன் கலந்தாய்வு மற்றும் விவர வெளிப்பாடு, (v) ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் குறித்த குத்தகைதாரர் பொறுப்புகள், (vi) சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆவனங்கள், ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நடவடிக்கைகள், (vii) நிறுவன ஏற்பாடுகள், (viii) களத் தணிக்கை குறிப்புகள் மற்றும் (ix) முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

4. ***சுற்றுச்சூழல் சான்றாவணம்:*** பகுதி 1, 4 மற்றும் 5க்கான சான்றானை ஆய்வு இருப்பில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு அறிக்கைகள், பொதுமக்கள் கலந்தாய்வு (கூட்ட நடவடிக்கை குறிப்புகள்), விரிவான திட்ட அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக பின்வரும் ஆவனங்களின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

| வ.எண் | ஆவனம் | வருடம் | ஆவனத்தின் நோக்கம் |
|---|---|---|---|
| 1 | சென்னை – வெளிவட்ட சுற்றுச்சாலை மேம்பாட்டிற்கான ஜப்பான் பண்ணாட்டு கூட்டுறவு முகமையின் ஆரம்பகட்ட ஆய்வு | 2018 | பகுதி 1ஐ நடைமுறைபடுத்த தேவையான அடிப்படை விவரங்களை கணித்து சேகரம் செய்தல். இந்த ஆய்வு உத்தேசிக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலை வடிவமைப்பு, திட்டத்தின் செலவு, நடைமுறைப்படுத்துவதற்கான செயல் திட்டமிடல், கொள்முதல் மற்றும் |

[1] இணைந்த வசதிகள் என்பது திட்ட விளக்கத்தில் சேர்க்கபடாத, வங்கியால் சேவை பெறுபவருடன் கலந்தாலோசனைக்கு பிறகு முடிவு செய்யப்பட்டு, திட்டத்தை நெறிப்படுத்தும் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்ட செயல்கள் ஆகும். அவை (அ) திட்டதிற்கு நேரடியாக மற்றும் இயற்பொருள் ரீதியாக தொடர்புடையவை; (ஆ) திட்டத்துடன் சம காலத்தில் செயல்படுத்தப்பட்டவை அல்லது செயல்படுத்த திட்டமிடப்பட்டவை மற்றும் (இ) திட்டத்தின் வெற்றிக்கு இன்றியமையாதது மற்றும் திட்டம் இல்லாத நிலையில் விரிவாக்கம் அல்லது கட்டுமானம் மேற்கொள்ளப்படாதது ஆகியவை ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| | | | கட்டுமான முறையுடன் சமூக மற்றும் சுற்றுச்சூழல் நிலமைகளை உள்ளடக்கிய திட்டப் பிண்ணனியினை சுருக்கமாக வழங்கும். |
| 2 | சிங்கப்பெருமாள் கோவில் முதல் ஸ்ரீபெரும்புதூர் (மா.நெ. 57) வரைக்குமான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை | 2007 | சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கையில் சிங்கப்பெருமாள் கோவில் முதல் ஸ்ரீபெரும்புதூர் (மா.நெ. 57) வரைக்குமான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பகுதி 4க்கு உண்டானதாகும். |
| 3 | மகாபலிபுரத்தை என்னூர் துறைமுகத்துடன் சிங்க்ப்பெருமாள் கோவில், ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர், தாமரைபாக்கம், பெரியபாளையம், புதுவயல் மற்றும் காட்டுப்பள்ளி வழியாக இணைக்கும் எல்லைச் சாலை உருவாக்க பணியின் விரிவான திட்ட அறிக்கை (வி.தி.அ) | 2014 | நெடுஞ்சாலை வடிவமைப்பு, உத்தேசிக்கப்பட்டுள்ள குறும்பாலங்கள் உள்ளிட்ட கட்டுமான விவரங்கள், பாலங்கள் (பெரியது மற்றும் சிறியது) ஆகிய விவரங்களை அளிக்கும். |
| 4 | சென்னை எல்லைச் சாலையின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) அறிக்கை. | 2018 | மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைக் குழுவின் இசைவினை பெற்று சு.தா.ம அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அது ஒட்டுமொத்த 5 பகுதிகளுக்கும் விரிவான ஒரு அறிக்கையாகும். சு.தா.ம அறிவிக்கை 2006ன் வழிகாட்டுதல்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டதாகும். |
| 5 | வி.தி.அ யின் தொகுதி V சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (வி.தி.அ யின் ஆலோசகர்களால் தயார் செய்யப்பட்டது) | 2016 | இவ்வறிக்கை ஐந்து பகுதிகளுக்கும் தயாரிக்கப்பட்டது. இருப்பினும் திட்டததின் சு.தா.ம இசைவிற்கு பொருந்த கூடிய வகையில் 2018ல் மேம்படுத்தப்பட்டது. |
| 6 | வி.தி.அ யின் தொகுதி IV சமூக தாக்க மதிப்பீடு (ச.தா.ம) மற்றும் மறுகுடியமர்வு செயல் திட்டம் (வி.தி.அ யின் | 2016 | ச.தா.ம ஆனது பல்வேறு செறிவு திட்டங்களாக தயாரிக்கப்பட்டது. பகுதி 1க்கு தனியாக ஒரு ச.தா.ம வும், பகுதி 2, 3 மற்றும் 5க்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆலோசகர்களால் தயார் செய்யப்பட்டது) | | ஒருங்கினைந்த ச.தா.ம வும் தயாரிக்கப்பட்டன. பகுதி 4ன் பணிகள் ஏற்கனவே முடிவடைந்ததால் அதற்கான ச.தா.ம எதுவும் இல்லை. |
| 7 | 10.07.2014 மற்றும் 12.07.2014 அன்று நடைபெற்ற பொதுமக்களுடனான கலந்துரையாடல் கூட்டத்தின் கூட்ட நடவடிக்கை குறிப்பு (கூ.ந.கு) | 2014 | சு.தா.ம மற்றும் ச.தா.ம தயாரிப்பின் ஒரு அங்கமாக திட்ட நேர்பாட்டின் முக்கியமான இடங்களில் பொதுமக்களுடனான கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான கூ.ந.கு ம் தாயாரிக்கப்பட்டது. |
| 8 | மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள் | 2020 | திட்ட நடைமுறைபடுத்துதலில் பல்வேறு செயல்பாடுகளின் நிலை குறித்து சுட்டி காட்டியுள்ளது. |

5. திட்டத்தின் பகுதி 4, மாநிலத்தின் நிதியுதவியுடன், சுற்றுச்சூழல் இசைவு தேவைப்படாத நிலை மற்றும் தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்ட அடிப்படையில் நிலம் கையகப்படுத்துதல் ஆகியவற்றுடன் த.சா.உ.மே.க த்தால் (தமிழ் நாடு நெடுஞ்சாலை துறையின் (த.நா.நெ.து) ஒரு பிரிவு) ஏற்கனவே நடைமுறைபடுத்தப்பட்டு இருந்ததால் அதற்கான பாதுகாப்பு ஆவனங்கள் மிக மிக குறைவாகவே கிடைக்கப்பெற்றன. வி.தி.அ ஆலோசகர்களால் 2007ம் வருடம் தயாரிக்கப்பட்ட இந்த பாதுகாப்பு ஆவனத்தில் திட்டம் குறித்த மிக குறைவான விவரங்களே உள்ளன.

(i) **ஒழுங்குமுறை தேவைகள்.** சு.தா.ம ல் தேவையான சட்டங்கள், விதிகள் மற்றும் இதர ஒழுங்குமுறை தேவைகள் ஆகியவற்றை பற்றி விவாதிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது. திட்டம் சார்ந்த முக்கிய இசைவுகள் பின் வருமாறு.

(அ) மா.சு.ம.கு விடம் செ.எ.சா.தி க்கான சுற்றுச்சூழல் இசைவு (அனைத்து பகுதிகளுக்கும்) ஆகஸ்ட் 10, 2018ம் தேதி பெறப்பட்டுள்ளது.

(ஆ) பகுதி 1க்கு, பக்கிங்காம் கால்வாய் இருப்பதால் (அலை செயல் விளைவு காரணமாக) க.ஒ.ம இசைவு அவசியம் என்பதால் ஆகஸ்ட் 5, 2019ம் தேதி அதற்கான இசைவு பெறப்பட்டுள்ளது.

(இ) பகுதி 4ல், குளத்தூர் காப்புக்காடு, தாலிமங்கலம் காப்புக்காடு, அப்பூர் காப்புக்காடு மற்றும் வட்டம்பாக்கம் காப்புக்காடு ஆகியவற்றில் அமைந்துள்ள 20.5 எக்டேர் வன நிலத்தினை மாற்றம் செய்ய வனத்துறையின் இசைவு ஆகஸ்ட் 14, 2014ம் தேதி பெறப்பட்டுள்ளது (மா.வ.அ, காஞ்சிபுரம், செயல்முறை ஆனை எண் 7326/2011/வ நாள் 14/08/2020ன் படி).

(ஈ) பிரிவு 5ல், திருத்தேரி காப்புக்காடு மற்றும் செங்குன்றம் காப்புக்காட்டில் 9.95 எக்டேர் வன நிலத்தை கையகப்படுத்த வனத்துறையின் இசைவிற்காக வனத்துறையிடம் விண்ணப்பிக்கப்பட்டு, இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

**முக்கிய கண்காணிப்புகள்:**

| விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் | பகுதி 1 | பகுதி 4 | பகுதி 5 |
|---|---|---|---|
| க.ஒ.ஆ இசைவு | பெறப்பட்டுள்ளது[2] | பெறப்பட்டுள்ளது | பெறப்பட்டுள்ளது |
| வன நில மாற்றத்திற்கான வனத்துறை இசைவு | தேவை எழவில்லை | 20.5 எக்டேர் வன நில மாற்றத்திற்கான இசைவு வனத்துறையிடம் பெறப்பட்டுள்ளது | 9.95 எக்டேர் வன நில மாற்றத்திற்கான வனத்துறை இசைவு பெற நடவடிக்கையில் உள்ளது |
| மரங்கள் வெட்டுவதற்கான அனுமதி | 81 மரங்கள் இடம் மாற்றி நடவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும், க.மே.ஆன் கண்காணிப்பு அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை | 1459 மரங்கள் வெட்டுவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது | 485 மரங்கள் இடம் மாற்றி நடவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது |
| இதர இசைவுகள்<br>• அனல் கலவைக் கலன்கள், நொறுக்கிகள் மற்றும் தொழிலாளர் முகாம்கள்<br>• ஆற்றுப் படுகையில் இருந்து மணல் எடுக்க<br>• புதிய குவாரி திறக்க அனுமதி<br>• நிலத்தடி நீரை திரும்ப பெறுவதற்கு அனுமதி<br>• மாசு கட்டுக்குள் உள்ளதற்கான சான்று<br>• தொழிலாளர்கள் பணியமர்த்துதல்<br>• வேலையாட்களை பதிவு செய்தல் | முதன்மைப் பணிகள் (வடிவமைப்பு மறுசீராய்வு மற்றும் இதர மேஜை பணிகள்) துவக்கப்பட்டுள்ளன, எனவே பட்டியலிடப்பட்ட இசைவுகள் பெறப்படவில்லை.<br><br>இசைவுகளை பெற விண்ணப்பங்கள் சமர்ப்பித்து, அதற்கான தொடர் நடவடிக்கை நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்பார்வை ஆலோசகரால் மேற்கொள்ளப்படும் | அனைத்து இசைவுகளும் ஒப்பந்ததாரரால் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான ஆதாரமாக திட்ட ஆய்வு அறிக்கை போன்றவை இல்லை. | இப்பகுதி இன்னும் வரைவு வி.தி.அ நிலையிலேயே உள்ளது. இப்பகுதியில் சாலை கட்டுமானம் பின்னர் மேற்கொள்ளப்படும். |

(ii) **அடிப்படை சுற்றுச்சூழல் தகுதிநிலை.** பகுதி 1, 4 மற்றும் 5 ஆகியவை திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வருகின்றன. அனைத்து பகுதிகளிலும் இட அமைப்பு பெரும்பாலும் அதிக ஏற்ற தாழ்வுகள் இல்லாத சமதளமாகவும், மேற்கு திசை சராசரி கடல் மட்டத்தில் இருந்து 183 மீட்டர் உயரத்திலும், கிழக்கு திசை கடல் மட்டத்திலும்

[2] க.ஒ.ம த்திற்கான இசைவு சென்னை எல்லைச் சாலைத் திட்டம் முழுமைக்கும் பெறப்பட்டதால், அனைத்து திட்டப் பகுதிகளுக்கும் பொருந்தும்.

அமைந்துள்ளது. 950 மி.மீ முதல் 1214 மி.மீ. வரை சராசரி மழையளவு வேறுபடுகிறது. வெப்பம் $20^0$ செ. முதல் $37^0$ செ. வரை வேறுபாட்டெல்லையுடன், கோடை காலத்தில் $43^0$ செ. வரை அடைகிறது. பகுதி 1ல் அதிகமாக மணல் கலந்த செம்மண்/ களி கலந்த குறுமண்ணும், பகுதி 4ல் பழுப்பு நிற களி மண்ணும் காணப்படுகின்றன. நிலத்தடி நீர் நில மேற்பகுதி முதல் பாதி-கட்டுபடுத்தப்பட்ட பகுதி வரை காணப்பட்டு, கிணறுகள் வெட்டுவதன் மூலம் மேம்படுத்தப்படுகிறது. கிணறுகளின் ஆழம் நில மட்டத்திற்கு கீழ் 8 முதல் 15 மீ. வரை ஏற்ற இறக்கங்களுடன் உள்ளது. அனத்து பகுதிகளிலும் சுற்றுப்புற காற்றின் தரம் கண்காணிக்கப்பட்டதில், பகுதி 4 மற்றும் 5ல் $PM_{2.5}$ மற்றும் $PM_{10}$ ஆகியவை அதிகமாக காணப்படுகிறது. எனினும், இதர கூறளவுகளான நைட்ரஜன் ஆக்ஸைடு, சல்பர் டைஆக்ஸைடு ஆகியவை தே.சு.கா.த. நிர்ணய அளவுகளை விட குறைவாகவே உள்ளது. பகுதி 1, 4 மற்றும் 5ஐ உள்ளடக்கி ஒலி அளவுகள் 8 இடங்களில் கண்காணிக்கப்பட்டதில், பூஞ்சேரியில் (பகுதி 4) பதிவு செய்யப்பட்ட ஒலி அளவுகள் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளை விட அதிகமாக உள்ளது. நில மேற்பரப்பு நீரின் தரத்தை பொறுத்த வரை, பக்கிங்காம் கால்வாயில் சேகரம் செய்யப்பட்ட மாதிரியில் மின் கடத்துத்திறன் (மி.க.), ஒட்டுமொத்த கரைந்த நிலை திடப்பொருட்கள் (ஒ.க.தி), கால்சியம், மக்னீசியம் மற்றும் குளோரைடுகள் ஆகியவை அதிக அடர்த்தியில் காணப்படுகிறது. பகுதி 1 மற்றும் 5 ஆகியவை விவசாய நிலம் மற்றும் தரிசு நிலம் வழியாக கடந்து செல்லும் பசுமைவழி சாலைகள் என்பதால், தாவரங்கள் மீதான தாக்கம் மிக குறைவாகவே காணப்படுகிறது. சாலை விவரப்பட்டியலில் உள்ள விவரங்களின் படி திட்டப் பகுதி 1ல் 81 மரங்களும், திட்டப் பகுதி 5ல் 485 மரங்களும் இடம் மாற்றி நட மதிப்பிடப்பட்டுள்ளது. திட்டப் பகுதி 4ஐ 6 வழி சாலையாக அகலப்படுத்த கிட்டத்தட்ட 1459 மரங்கள் அகற்றப்பட்டுள்ளது. மா.சு.ம.கு பரிந்துரைப்படி சாலை அகலப்படுத்தும் பணியின் பொழுது பாதிக்கப்படும் அனைத்து மரங்களும் இடம் மாற்றி நடவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விவர கணக்கெடுப்பில், கணக்கெடுப்பில் 30 வகையான மர வகைகள் இருப்பது தெரிய வருகிறது. அவற்றில் புளியன், தென்னை, அரசு, வேம்பு ஆகியவை அதிக அளவில் காணப்படும் தாவர வகைகளாகும். மண்ணூர் காப்புக்காடு மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள வயல் வெளிகளில் கீரிப்பிள்ளை, சாரைப் பாம்பு, கண்ணாடி விரியன் பாம்பு, உள்ளிட்ட விலங்கினங்களும், காகம், புறா, உண்ணிக் கொக்கு, வெள்ளை பினந்தின்னி கழுகு உள்ளிட்ட பறவையினங்களும், முயல், வௌவால் மற்றும் அணில் உள்ளிட்ட பாலூட்டிகளும் உள்ளது தெரிய வருகிறது.

**முக்கிய கண்காணிப்புகள்:**

| நிலம் சார்ந்த மற்றும் உயிர் | பகுதி 1 | பகுதி 4 | பகுதி 5 |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| சுற்றுச்சூழல் | | | |
| நீரின் தரம் | கடல் தாக்கத்தால் ஒ.க.தி ன் அடர்த்தி அதிகமாக உள்ளது | ஒ.க.தி ன் அளவுகள் நிர்ணய அளவிற்குள் உள்ளது | கடல் தாக்கத்தால் ஒ.க.தி ன் அடர்த்தி அதிகமாக உள்ளது |
| நீர் நிலைகள் | கடல் அலை ஆதிக்க பகுதியில் பக்கிங்காம் கால்வாயின் இருப்பு க.ஒ.ஆ இசைவினை பெறுவதை வலியுறுத்துகிறது. அது தவிர 3 நில மேற்பரப்பு நீர் நிலைகள் உள்ளன. | 16 நில மேற்பரப்பு நீர் நிலைகள் அடையாளம் காணப்பட்டன. | நீர் நிலைகள் குறித்த விவரங்கள் கிடைக்கப் பெறவில்லை. |
| சுற்றுவட்டார காற்றின் தரம் (சு.கா.த) | சு.கா.த கூறளவுகள் அனுமதிக்கப்பட்ட வரம்பிற்குள் உள்ளன (தே.சு.கா.த நிர்ணய அளவுகள) | $PM_{2.5}$ மற்றும் $PM_{10}$ ஆகியவை அதிகமாக காணப்படுகிறது. | $PM_{2.5}$ மற்றும் $PM_{10}$ ஆகியவை அதிகமாக காணப்படுகிறது. |
| ஒலியின் தரம் | ஒலி அளவுகள் வரம்பிற்குள் உள்ளது. | போக்குவரத்தால் ஒலி அளவுகள் அதிகம் | ஒலி அளவுகள் வரம்பிற்குள் உள்ளது. |
| வனப் பகுதி | இத்திட்டப் பகுதியில் வனப் பகுதிகள் இல்லை | குளத்தூர், தலிமங்கலம், அப்பூர் மற்றும் வட்டம்பாக்கம் ஆகிய 4 காப்புக்காட்டு பகுதிகள் இத்திட்ட பகுதியில் அமைந்துள்ளன | திருத்தேரி, செங்குன்றம் ஆகிய 2 காப்புக்காட்டு பகுதிகள் இத்திட்ட பகுதியில் அமைந்துள்ளன |
| மரங்களுக்கு பாதிப்பு | 81 மரங்களை இடம் மாற்றி நடவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு மர வகையும் அழிநிலையாக வகைப்படுத்தப்படவில்லை. | திட்டப் பகுதி 4ல் கட்டுமான பணிகளுக்காக 1459 மரங்கள் அகற்றப்பட்டன. எந்த ஒரு மர வகையும் அழிநிலையாக வகைப்படுத்தப்படவில்லை. | 485 மரங்களை இடம் மாற்றி நடவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு மர வகையும் அழிநிலையாக வகைப்படுத்தப்படவில்லை |

**(iii) கட்டுமான பணி மற்றும் செயல்பாட்டு நிலையில் தாக்க மதிப்பீடு:** சு.தா.ம அறிக்கைகளில் (வி.தி.அ ஆலோசகர் மற்றும் சு.தா.ம ஆலோசகர் ஆகியோரால் தயாரிக்கப்பட்டது) உள்ள விவரங்களின் அடிப்படையில், கட்டுமான படிநிலை மற்றும் செயல்பாட்டு படிநிலைகளில் தாக்க மதிப்பீட்டு பகுதியானது (i) மாசு கட்டுப்பாடு, (ii) இயற்கை சுற்றுச்சூழல், (iii) சமூக மற்றும் பொருளாதார சுற்றுச்சூழல் ஆகியவற்றின் மீதான தாக்கத்தின அளவுகள் அட்டவணையாக தயாரிக்கப்பட்டுள்ளது.

**முக்கிய கண்காணிப்புகள்:**

| தாக்க மதிப்பீடு | பகுதி 1 | பகுதி 4 | பகுதி 5 |
|---|---|---|---|
| கடற்கரை மண்டலம் | கட்டுமான பணிகளால் கடல் தேங்கு நீர்/ பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றின் மீதான தாக்கத்தின் விரிவான மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை | கடற்கரை ஆதிக்கம் எதுவுமில்லை | கடற்கரை ஆதிக்கம் எதுவுமில்லை |
| காற்று மற்றும் ஒலி தர | மேற்கொள்ளப்படவில்லை | மேற்கொள்ளப்படவில்லை | மேற்கொள்ளப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| மாதிரியமைத்தல் | | | |
| உணர்ச்சிமிகு உள்வாங்கிகளின் மீதான தாக்கம் | பள்ளிகள், கோவில்கள் உள்ளிட்ட உணர்ச்சிமிகு உள்வாங்கிகளின் விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2 பள்ளிகள் மற்றும் 6 கோவில்கள் பாதிக்கப்படுகின்றன | உத்தேசிக்கப்பட்ட நேர்பாடு 4 பள்ளிகள் மீது தாக்கத்தை உண்டு பண்ணும் என்றும், ஆன்மீக கட்டுமானங்கள் மீது தாக்கம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பள்ளிகள், கோவில்கள் உள்ளிட்ட உணர்ச்சிமிகு உள்வாங்கிகளின் விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 4 பள்ளிகள் பாதிக்கப்படுகின்றன |
| நில மேற்பரப்பு நீர் நிலைகளின் மீதான தாக்கம் | திட்ட கட்டுமான பணிகளால் பாதிப்புக்குள்ளாகும் நீர் நிலைகள் குறித்த விவரங்கள் இல்லை | உத்தேசிக்கப்பட்ட நேர்பாட்டால் நீர் நிலைகளுக்கு பாதிப்பு இல்லை. (தாக்கங்கள் எதிர்நோக்கப்படவில்லை) | திட்ட கட்டுமான பணிகளால் பாதிப்புக்குள்ளாகும் நீர் நிலைகள் குறித்த விவரங்கள் இல்லை |
| நீர் பல்லுயிர்பண்மை மீதான தாக்கம் | மேற்கொள்ளப்படவில்லை | நில மேற்பரப்பு நீர் நிலைகளுக்கு பாதிப்பு இல்லை. | மேற்கொள்ளப்படவில்லை |
| பல்லுயிர்பண்மை மீதான தாக்கம் | வனப் பகுதிகள் இல்லை | வனப் பகுதிகளுக்கு (குளத்தூர், தலிமங்கலம், அப்பூர் மற்றும் வட்டம்பாக்கம் காப்புக் காடுகள்) பால்லுயிர்பண்மை தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை | வனப் பகுதிகளுக்கு (திருத்தேரி மற்றும் செங்குன்றம் காப்புக் காடுகள்) பால்லுயிர்பண்மை தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை |
| கட்டுமானப் பணி தொடர்பான தாக்கங்கள் | கடன் குழிகள், குவாரிகள் இயக்கம், மண் அரிமானம், வடிகால், வண்டல் அடித்து செல்லுதல் மற்றும் நிலச்சரிவு ஆகியவற்றின் தாக்கங்கள் குறித்த போதுமான விவரங்கள் இல்லை | | |
| செயல்பாட்டு நிலையில் தாக்கங்கள் | சாலை சொத்துக்களின் பராமரிப்பு, சமூக ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவை சேர்க்கபடவில்லை. | | |
| சாலையோர மரங்கள் மீதான தாக்கம் | அடிப்படை சுற்றுச்சூழல் படிநிலையில் உள்ள முக்கிய கண்காணிப்பு விவரங்களை பார்க்கவும் | | |
| தொழிற்சார்ந்த சமூக ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு | கட்டுமான பணிகள் மற்றும் செயல்பாட்டு நிலையில் போக்குவரத்து மேலாண்மையில் ஏற்படும் தாக்கங்கள் விவரிக்கப்படவில்லை | ஓரளவிற்கு செய்து முடிக்கப்பட்டுள்ளது | கட்டுமான பணிகள் மற்றும் செயல்பாட்டு நிலையில் போக்குவரத்து மேலாண்மையில் ஏற்படும் தாக்கங்கள் விவரிக்கப்படவில்லை |
| பருவநிலைக்கு தீங்கு மற்றும் சரிப்படுத்தும் நடவடிக்கைகள் | மேற்கொள்ளப்படவில்லை | மேற்கொள்ளப்படவில்லை | மேற்கொள்ளப்படவில்லை |

(iv) **சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம் (சு.க.தி):** தயாரிக்கப்பட்ட சு.மே.தின் அடிப்படையில் சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம் (சு.க.தி) தயாரிக்கப்பட்டுள்லது. சு.மே.தி யின் நடவடிக்கைகளை திறம்பட கண்காணிக்க, தயாரிக்கப்பட்ட சு.க.தி ஆனது, (i) சுற்றுச்சூழல் நிலைமை சுட்டிகள், (ii) சுற்றுச்சூழல் மேலாண்மை சுட்டிகள் மற்றும் (iii) மேலாண்மை மற்றும் செயல்பாட்டு நிலை செயல்திறன் சுட்டிகள் ஆகியவற்றை விவரித்து அனைத்து திட்டப் பகுதிகளுக்கும் ஒன்று போல் தயாரிக்கப்பட்டுள்ளது.

(v) **சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் அறிக்கை செய்தல்:** திட்டப் பகுதி 4க்கு பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை செய்யும் முறை குறிப்பிட்ட படிவங்களை கொண்டுள்ளது. எனினும், படிவங்கள் மிக குறைவாகும். திட்டப் பகுதி 1 மற்றும் 5க்கு அறிக்கை செய்யும் முறை இரண்டு நிலைகளில் அதாவது, திட்ட செயலாக்க அலகிற்கு

(அ) சுற்றுச்சூழல் நிலைமை சுட்டிகள் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை சுட்டிகள் (மரம் வெட்டும் சுட்டி தவிர) ஆகியவற்றிற்கான அறிக்கை,

(ஆ) மேலாண்மை மற்றும் செயல்பாட்டு நிலை செயல்திறன் சுட்டிகளுக்கான அறிக்கை

(vi) **சு.மே.தி க்கான நிதி:** திட்டப் பகுதி 1க்கு ரூ. 291.84 லட்சம், திட்டப் பகுதி 1க்கு ரூ. 291.84 லட்சம், திட்டப் பகுதி 4க்கு ரூ. 207.05 லட்சம் மற்றும் திட்டப் பகுதி 5க்கு ரூ. 300.19 லட்சம் சு.மே.தி க்கான நிதியாக மதிப்பிடபட்டுள்ளது.

**6. சமூக சான்றாவணம்:** சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கை / மறுகுடியமர்வு செயல் திட்டம் (ம.செ.தி), பொதுமக்கள் கலந்துரையாடல் கூ.ந.கு மற்றும் வி.தி.அ களின் அடிப்படையில் திட்டப் பகுதிகள் 1, 4 மற்றும் 5க்கு சமூக சான்றாவண ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. எனினும், திட்டப் பகுதி 4 ஏற்கனவே மாநில நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டதால் குறைந்த அளவு பாதுகாப்பு ஆவனங்களே உள்ளன.

(i) **ஒழுங்குமுறை தேவைகள்.** கீழ்கண்ட கொள்கைகள் / சட்டங்கள் / விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை தழுவி தி.பா.ம / தி.பா.கு களுக்கு பல்வேறு இழப்பீடுகளுக்கு அதிகாரப்பூர்வ உரிமைக்கான அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

(அ) நேர்மையான மற்றும் ஒளிவுமறைவற்ற நிலம் கையகப்படுத்துதல், மறு குடியமர்வு மற்றும் மறுவாழ்வு உரிமைக்கான சட்டம் 2013 (2013ம் வருடத்தின் 30வது சட்டம்),

(ஆ) தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம் 2007,

(இ) தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் 2001 (த.நா.நெ.ச),

(ஈ) தமிழ்நாடு சாலையோர விற்பனையாளர்கள் (வாழ்வாதார பாதுகாப்பு, சாலையோர விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம்

**முக்கிய கண்காணிப்புகள்:**

| ஒழுங்குமுறை தேவைகள் | பகுதி 1 | பகுதி 4 | பகுதி 5 |
| --- | --- | --- | --- |
| திட்டத்தால் பாதிக்கப்பட்ட | செ.க.தொ.திக்கு தயாரிக்கப்பட்ட | தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் | செ.க.தொ.திக்கு தயாரிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| மக்களுக்கு இழப்பீட்டு மதிப்பு | அதிகாரப்பூர்வ உரிமைக்கான அட்டவணையை அடிப்படையாக கொண்டு திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் / திட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டு மதிப்பு செய்யப்பட்டுள்ளது | மற்றும் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மறு குடியமர்வு சட்டத்தின் படி திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் / திட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டு மதிப்பு செய்ய பயன்படுத்தப்பட்டுள்ளது | அதிகாரப்பூர்வ உரிமைக்கான அட்டவணையை அடிப்படையாக கொண்டு திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் / திட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டு மதிப்பு செய்யப்பட்டுள்ளது |

(ii) **கணக்கெடுப்பு** ~~ஆய்வு.~~ திட்டப்பகுதி 1 மற்றும் 5ல் பாதிக்கப்படவுள்ள கட்டிடங்கள் மற்றும் சொத்துக்கள் மீதான கணக்கெடுப்பு ~~ஆய்வு~~ மேற்கொள்ளப்பட்டது. பகுதி 1ன் கணக்கெடுப்பில் 35% உள்ளடக்கப்பட்டது. திட்டத்தால் பாதிப்புக்குள்ளாகும் மக்களின் நிலம், சொத்து, வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றின் இழப்பினை உறுதிபடுத்தவும், உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தால் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய குடும்பங்களை கண்டறியவும், 20% பாதிப்புக்குள்ளான நில பகுதிகளில் சமூக-பொருளாதார ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

(அ) **திட்டப் பகுதி 1 (தே.நெ. எண் 16ல் எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரை).** மொத்தம் 1312 நில பிரிவுகள் திட்டத்தால் பாதிக்கப்படும் என கண்டறியப்பட்டது. அவற்றுள் 175 நில உரிமையாளர்கள், 76 பாதிப்புள்ளாகும் கட்டிடங்கள் மற்றும் 11 பொது சொத்து வளங்களையும் (பொ.சொ.வ கள் கோவில்கள், அரசு பள்ளிகள் மற்றும் அரசி கட்டிடங்களை உள்ளடக்கியதாகும்) சேர்த்து 458 நில பிரிவுகளுக்கு கணக்கெடுப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பாதிப்புக்குள்ளாகும் 20% நில பரப்பிற்கு சமூக-பொருளாதார ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. பட்டியலில் தி.பா.குங்கள் மட்டுமல்லாமல் பாதிப்புக்குள்ளாகும் சமூக சொத்துக்களும் சேர்க்கப்பட்டன. 100 மீ. வழித்தட உரிமைக்காக 255.00 எக்டேர் நிலம் (தனியார் மற்றும் அரசு நிலங்கள்) கையகப்படுத்த மதிப்பிடப்பட்டுள்ளது.

(அ) **பாதிப்புக்குளாகும் நில உரிமையாளர்கள்.** வ.து.அ.சா மற்றும் TPP இணைப்பு சாலையின் 458 நிலப் பிரிவுகளில் பாதிப்புக்குள்ளாகும் நிலங்களில் கிட்டத்தட்ட 52% புஞ்சை நிலங்களும், 37% நஞ்சை நிலங்களும், 8% குடியிருப்புகள் அல்லது வீட்டு மனைகளாக மாற்றப்பட்ட நிலங்கள் மற்றும் 3% நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்கள் (பல்வேறு அறக்கட்டளைகள், கூட்டாண்மை அமைப்புகள், வாரியங்கள் மற்றும் தனியார் கோவில்களுக்கு சொந்தமானவை)

ஆகும். ஆய்வு செய்யப்பட்ட மொத்த நிலப் பரப்பில் 76% பாசன வசதியுடனும், 16% பாசன வசதி அற்றதாகவும் மற்றும் 8% குடியிருப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்களாக பாசன வசதி அற்று இருக்கின்றன. பயிரிடப்படுகின்றவற்றில் 76% நெற்பயிர் ஆகும் மற்றும் இதர பயிர்களும் சுழற்சி முறையில் பயிரிடப்படுகின்றன.

(ஆ) **பாதிப்புக்குளாகும் சொத்து உரிமையாளர்கள்.** 76 பாதிப்புக்குள்ளாகும் கட்டிடங்கள், 85 குடும்பங்கள்/தி.பா.கு ங்களை உள்ளடக்கி சொத்து பட்டியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவற்றுள் 58 நில உரிமையாளர்கள், 18 ஆக்கிரமிப்போர் மற்றும் 9 குத்தகைக்காரர் ஆகியோர் அடங்குவர். பாதிப்புக்குள்ளாகும் 76 கட்டிடங்களில், 59 கட்டுமானங்கள் 1/3 பங்கிற்கு மேல் முழுமையாக பாதிப்புக்குளாகின்றன (பெரிய அளவிலான தாக்கம்) மற்றும் 17 கட்டுமானங்கள் பகுதியளவில் பாதிப்புக்குளாகின்றன (சிறிய அளவிலான தாக்கம்). கிணறுகள், ஆழ்துளை கிணறுகள், மின்சார அறை, இறைப்பான் அறை, விசைப் பொறி அறை மற்றும் கழிவு நீர்த் தொட்டி உள்ளிட்ட 69 கட்டுமானங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன.

(ஆ) **திட்டப் பகுதி 4 (ஸ்ரீபெரும்புதூர் முதல் சிங்கப்பெருமாள் கோவில் வரை).** ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல, திட்டப் பகுதி 4ஐ மாநில நிதி உதவியுடன் த.நா.சா.உ.மே.க த்தால் நடைமுறைபடுத்தப்பட்டது. 2007ம் வருடம் வி.தி.அ ஆலோசகர்களால் சமூக தாக்க மதிப்பீடு (ச.தா.ம) தயாரிக்கப்பட்டது. திட்டப் பகுதி 4ஐ அகலப்படுத்த 1071 நில உரிமையாளர்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் 89.05 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தல் மதிப்பிடப்பட்டது. உத்தேசிக்கப்பட்ட அகலப்படுத்தும் பணி 453 குடியிருப்பு கட்டுமானங்கள், 138 வணிக கட்டுமானங்கள் மற்றும் 10 குடியிருப்புடனான வணிக கட்டிடங்களை உள்ளடக்கிய 693 கட்டுமானங்களின் மீது நேரடி தாக்கத்தினை கொண்டுள்ளது. 33 பொது பயன்பாட்டு கட்டிடங்கள் (மருத்துவமனைகள், திரையரங்குகள், கல்வி நிறுவனங்கள், பொது கழிப்பறைகள் மற்றும் அரசு கட்டிடங்கள்), 26 மதம் சார்ந்த கட்டுமானங்கள், 5 ஏரிகள், 5 கிணறுகள் மற்றும் 10 பேருந்து நிழற்கூடாரங்கள் உள்ளிட்ட இதர கட்டுமானங்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. திட்டப் பகுதி 4ல் இருப்புப் பாதை கடவிற்காக ரூ. 143.28 கோடி நிர்வாக ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது. திட்டப் பகுதி 4ஐ

வாகன சுரங்கப் பாதைகள், சாலை சந்திப்பு மேம்பாடுகள் மற்றும் சாலை பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த நுழைவு கட்டுப்பாடு கொண்ட சாலையாக மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) **திட்டப் பகுதி 5 (சிங்கப்பெருமாள் கோவில் முதல் மகாபலிபுரம் வரை)**. பாதிப்புக்குள்ளாகக்கூடிய நிலப் பரப்புகளுக்கு கணக்கெடுப்பு ஆய்வு இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், 60 மீ. வழித்தட உரிமைக்காக 162.83 ஹெக்டேர் நிலம் (தனியார் மற்றும் அரசு) கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாதிப்புக்குள்ளாகக்கூடிய கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் தாக்கத்தின் அளவினை புரிந்து கொள்ள கணக்கெடுப்பு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 273 குடும்பங்கள்/தி.பா.கு.ங்களை கொண்ட 150 கட்டிடங்களுக்கு சொத்து பட்டியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவற்றுள் 106 உடைமையுரியவர்கள், மற்றும் 44 ஆக்கிரமிப்போர் ஆகியோர் அடங்குவர். பாதிப்புக்குள்ளாகும் 150 கட்டிடங்களில், 111 கட்டுமானங்கள் 1/3 பங்கிற்கு மேல் முழுமையாக பாதிப்புக்குளாகின்றன (பெரிய அளவிலான தாக்கம்) மற்றும் 39 கட்டுமானங்கள் பகுதியளவில் பாதிப்புக்குளாகின்றன பாதிப்புக்குளாகின்றன (சிறிய அளவிலான தாக்கம்). குடியிருப்புகள் மற்றும் வனிக சொத்துக்களுடன் கிணறுகள், ஆழ்துளை கிணறுகள், மின்சார அறை, இறைப்பான் அறை, விசைப் பொறி அறை, மின்னியற்றி அரை மற்றும் பண்டக அறை உள்ளிட்ட இதர கட்டுமானங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன. திட்டப் பகுதி 5ல் 11 பொது சொத்து வளங்கள் (பொ.சொ.வ) பாதிப்புக்குள்ளாவதாக பொது சொத்து வளங்களுக்கான சொத்து விவர பட்டியல் ஆய்வில் தெரிய வருகிறது. 4 வழிபாட்டு தலங்கள் (3 கோவில் மற்றும் ஒரு தேவாலயம்), 3 அரசாங்க கட்டிடங்கள், 1 இறைப்பான் அறை, 2 பேருந்து நிழற்குடைகள் மற்றும் ஒரு மேல் நிலை நீர்த் தொட்டி ஆகியவை பொது சொத்து வளத்தில் தாக்கத்திற்கு உள்ளாவதாக தெரிய வருகிறது.

**முக்கிய கண்காணிப்பு:**

| கணக்கெடுப்பு ஆய்வு | பகுதி 1 | பகுதி 4 | பகுதி 5 |
|---|---|---|---|
| சமூக-பொருளாதார மற்றும் கணக்கெடுப்பு ஆய்வு | JICA கேட்டுக் கொண்டதற்கிணங்க கணக்கெடுப்பு ஆய்வில் 35% மும் மற்றும் சமூக பொருளதர ஆய்வில் 20% மும் தி.பா.ம /தி.பா.கு விற்கு மேற்கொள்ளப்பட்டன | வருவாய் துறை உதவியுடன் தி.பா.ம /தி.பா.கு ஆகியோர் த.நா.சா.உ.மே.க த்தால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்கெடுக்கப்பட்டனர் | உலக வங்கி தேவைகளுக்கிணங்க 25% கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் சமூக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது |

(iii) **அதிகாரப்பூர்வ உரிமைக்கான அட்டவணை.** உரிமைதாரர்கள், ஆக்கிரமிப்போர் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பாதிக்கப்பட்ட குறியீட்டு குழுக்களுக்கு அதிகாரப்பூர்வ உரிமைகள் கணக்கிடப்பட்டன. கலந்தாய்வுகளின் அடிப்படையில், ஆ.வ.வ.யால் நிதி உதவி வழங்கப்படும் செ.க.தொ.த. திட்டத்தில் பயன்படுத்தப்படும் அதிகாரப்பூர்வ உரிமைக்கான அட்டவணையை ஒத்துள்ளது தெரிய வருகிறது.

**முக்கிய கண்காணிப்பு:**

| அதிகாரப்பூர்வ உரிமைக்கான அட்டவணை | பகுதி 1 | பகுதி 4 | பகுதி 5 |
|---|---|---|---|
| திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டு மதிப்பு | செ.க.தொ.திக்கு தயாரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ உரிமைக்கான அட்டவணையை அடிப்படையாக கொண்டு திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் / திட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டு மதிப்பு செய்யப்பட்டுள்ளது | தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மறு குடியமர்வு சட்டத்தின் படி திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் / திட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டு மதிப்பு செய்ய பயன்படுத்தப்பட்டுள்ளது | செ.க.தொ.திக்கு தயாரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ உரிமைக்கான அட்டவணையை அடிப்படையாக கொண்டு திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் / திட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டு மதிப்பு செய்யப்பட்டுள்ளது |

(iv) **நிறுவன ஏற்பாடுகள்.** திட்டப் பகுதிகள் 1 மற்றும் 5க்கான ச.தா.ம அறிக்கையானது நிலம் கையகப்படுத்துதல் மறு வாழ்வு மற்றும் மறு குடியேற்ற அலகுகள் (நி.கை.ம.ம.அ) அமைக்க இருப்பதாக தெரிவிக்கிறது. இவ்வலகு தனி மாவட்ட வருவாய அலுவலர் (த.மா.வ.அ) தலைமையில், மறு குடியேற்ற திட்டத்தில் உதவி புரிய மீறுகுடியேற்ற அலுவலர் மற்றும் நிலம் கையகப்படுத்துதலில் உதவி புரிய வட்டாட்சியர்(கள்) கொண்டதாக இருக்கும். மறு குடியேற்ற நடவடிக்கை திட்டத்தினை (ம.ந.தி) நடைமுறைப்படுத்த, த.நா.நெ.து கீழ்கண்ட செயல்பாடுகளை துவங்கும்.

- த.நா.நெ.து யின் கீழ் ஒரு ம & ம அலகினை நிறுவுதல்
- சமூக மேலாளர் மற்றும் சுற்றுச்சூழல் மேலாளர் ஆகியோரை நியமித்தல்
- மறு குடியேற்ற நடவடிக்கை திட்டத்தினை நடைமுறைப்படுத்த அரசு சாரா அமைப்பு / ஆலோசனை நிறுவனத்தினை தேர்ந்தெடுத்தல்
- ம.ந.தி.த்தை நடைமுறைப்படுத்த கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு நிறுவனத்தினை தேர்ந்தெடுத்தல்
- திட்ட நடைமுறைபடுத்தும் அலகின் பணியாளர்கள், அரசு சாரா அமைப்பு மற்றும் ம.ந.தி.ஐ அமல்படுத்துவர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளித்தல்

திட்டப் பகுதி 1ல் ம.ந.தி. ஆனது ஒரு ஆலோசனை நிறுவனத்தால் (ம.தி. நடைமுறைபடுத்தும் ஆலோசகர்கள் என அழைக்கபடுவர்) நடைமுறைபடுத்தப்படுகிறது. திட்டப் பகுதி 4ல் நிலம் கையகப்படுத்துதல் த.நா.சா.உ.மே.க.த்தால் வருவாய் துறை உதவியுடன் நடைமுறைபடுத்தப்பட்டது.

(i) **குறைகள் தீர்க்கும் குழு (கு.தீ.கு).** பாதிப்புக்குள்ளாகும் இடம் பெயரும் மக்களின் (இ.ம.) கவலைகள், புகார்கள் மற்றும் குறைகளை பெற்று, மதிப்பீடு செய்து, தீர்வு காண்பதற்கு உதவ, செ.எ.சா.தி.ன் கு.தீ.கு.வின் அமைப்பு செ.க.தொ.த. திட்ட அமைப்புடன் பெருமளவு ஒத்த இரண்டடுக்கு கு.தீ.கு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த கு.தீ.கு இ.ம.க்கள் நிர்வாக எல்லைக்குட்பட்ட நி.கை.ம.ம.அ.ஐ அனுகுவதற்கு முன்னரே தங்களது குறைகள் களையப்பட ஒரு வாய்ப்பை அளிக்கும்.

(ii) **ம & ம நிதி.** திட்டப் பகுதி 1க்கு ரூ. 24.35 கோடி, திட்டப் பகுதி 5க்கு ரூ. 24.35 கோடியும் ம&ம நிதியாக மதிப்பிடப்பட்டுள்ளது. திட்டப் பகுதி 4ல் அகலப்படுத்தும் பணி ஏற்கனவே வழித்தட உரிமைக்குள் முன்னேற்றத்தில் இருப்பதால் அதற்கு ம&ம நிதி மதிப்பிடப்படவில்லை.

**7. பொதுமக்களுடன் கலந்துரையாடல்கள்.** வி.தி.அ தயாரிப்பின் பொழுது ஜூலை 2014ம் மாதம் செ.எ.சா. திட்டத்திற்கு பொதுமக்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. திட்டப் பகுதி 1க்கு 8 கிராமங்களில் இருந்து 51 நபர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் கூட்டம். பஞ்சட்டியில் ஒரு முறை நடத்தப்பட்டது. திட்டப் பகுதி 4க்கு 7 கிராமங்களில் இருந்து 25 நபர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் கூட்டம் ஒரகடத்திலும், திட்டப் பகுதி 5க்கு 19 கிராமங்களில் இருந்து 70 நபர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் கூட்டம் மானாமதியிலும் நடத்தப்பட்டது. தமிழ் நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் (த.நா.மா.க.வா) இரு இடங்களில் ஜூலை 2018ம் மாதம் 10 மற்றும் 12ம் தேதிகளில் முறையே காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டிலும், திருவள்ளூர் மாவட்டம் தாமரைபாக்கத்திலும் சுற்றுச்சூழல் இசைவிற்காக (சு.இ) பொதுமக்கள் கலந்துரையாடல் கூட்டங்கள் நடத்தப்பட்டன. கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட முக்கிய விவரங்கள் பின் வருமாறு.

- செ.எ.சா.தி. அகலப்படுத்தப்படுவதால் பாதிப்புக்குள்ளாகக்கூடிய சொத்துக்கள் (நிலம் மற்றும் கட்டுமானங்கள்)
- பின்பற்றப்பட்ட நேர்பாடு மற்றும் அளவு கோல் விவரங்கள்
- சுரங்க வழிப் பாதை மற்றும் சாலையை கடந்து செல்வதற்கான வழிவகை விவரங்கள்
- கிராம சாலைகளை எளிதில் அணுக இடைச்சுவரில் திறப்புக்கான வழிவகை விவரங்கள்
- செ.எ.சா.தி.ல் உத்தேசிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள்

- தனியார் நிலங்கள் மற்றும் கட்டுமானங்கள் காப்பாற்ற நேர்பாட்டினை மாற்றி அமைத்தல்
- நிலம் மற்றும் கட்டுமானங்களுக்கான இழப்பீடு சந்தை விலை மற்றும் மாற்று விலைக்கு இணையாக இருத்தல்
- செ.எ.சா.தி.ஐ நடைமுறைபடுத்துவதால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு அரசு வேலை வழங்குதல்
- வாழ்வாதார உதவி குறித்த விவரங்கள்
- திட்ட வடிவமைப்பு, வழித்தட உரிமை, நிலம் கையகப்படுத்தும் விவரங்கள், தி.பா.ம.ன் விவரங்கள் உள்ளிட்ட திட்டத்தின் தகவல்கள்.

**8. சுற்றுச்சூழல் மற்றும் சமூக திருத்த நடவடிக்கை திட்டம் (சு.ச.தி.ந.தி).** சுற்றுச்சூழல் மற்றும் சமூக சான்றாவணத்தின் அடிப்படையில் பகுதி 5ல் பொருத்தமானதொரு சுற்றுச்சூழல் மற்றும் சமூக திருத்த நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த சு.ச.தி.ந.தி. காலக்கெடுவுடன் கூடிய திருத்த நடவடிக்கைகளை கொண்டிருக்கும்.

**9. முடிவு.** சு.தா.ம மற்றும் ச.தா.ம/ம.ந.தி அகியவற்றை நடத்த பின்பற்றப்பட்ட முறையியல்கள் பல்நோக்கு மேம்பாட்டு வங்கியின் கொள்கை தேவைகளை ஒத்துள்ளது. எனினும், திட்டப் பகுதிகள் 1, 4 மற்றும் 5க்கான சு.தா.ம மற்றும் ச.தா.ம/ம.ந.தி ஆவனங்களில் உள்ள சில இணக்கமில்லாதவைகளும், அவற்றின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளும் காலக்கெடுவுடன் கூடிய நடவடிக்கை திட்டம் பட்டியலிடப்பட்டு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஒழுங்குமுறை தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவன செயல்படும் முறை மற்றும் கு.தீ.கு ஆகியவையும் பல்நோக்கு மேம்பாட்டு வங்கியின் கொள்கை தேவைகளை ஒத்துள்ளது. சு.ச.தி.ந.தில் விவாதிக்கப்பட்டவற்றை தவிர்த்து, தயாரிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆவனங்களான சு.தா.ம மற்றும் ச.தா.ம/ம.ந.தி ஆகியவை மொத்தத்தில் திருப்திகரமாக இருப்பது தெரிய வருகிறது. கூர்ந்தாய்வு அறிக்கைகளின் அடிப்படையில், திட்டப் பகுதி 1ல் சு.மே.தி மற்றும் ம.ந.தி ஆகியவற்றின் நடைமுறைபடுத்துதலும் திருப்திகரமாகவே உள்ளது.